பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 12 சனிக்கிழமை 26-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 158

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2014)

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு பிரதமர் ரட்ணசிறி உட்பட மூத்த அமைச்சர்கள் எதிர்ப்பு

(நமது நிருபர்)

இலங்கைஅரசு தமிழீழ விடுதலைப் புலிகள்மீது விதித்துள்ள தடையை நீக்குவது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப் பட்டபோது பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் தமது எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரி வித்துள்ளனர்:

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி சமாதானப் பேச்சுவார்த் தையை ஆரம்பிக்க வேண்டும்என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய இருவ ரும் அமைச்சரளைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தனர்

ஜனாதிபதி சந்திரிகாகுமார துங்கா தலைமையில் அமைச் சரவைக்கூட்டம் நேற்று முன் தினம்ஜனாதிபதிமாளிகையில் நடைபெற்றது:

இக்கூட்டத்தில் நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சோல் ஹெய்ம்மூலம் விடுதலைப்புலி கள் தம் மீதான தடையை இலங்கையரசு நீக்கவேண்டும் என்று விடுத்திருந்த கோரி க்கை ஆராயப்பட்டது:

சமாதானப் பேச்சுவார்த் தைக்கு ஏற்றவாறுவிடுதலைப் புலிகள் மீதான தடையைநீக் குவதென்ற பிரேரணையை அமைச்சர்கள் கதிர்காமரும் ஜி. எல், பீரிசும் கொண்டுவந் திருந்தனர்-

இப்பிரேரணைக்கு எதிராக பெருமளவு சிரேஷ்ட அமைச் சர்கள் அங்கு போர்க் கொடி உயர்த்தினர், சிரேஷ்ட அமைச்சர்களுள் பிரதமர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்கா மற்றும் அமைச்சர்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பியினர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு தனி யான மாவட்டம் அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிடவேண்டுமென்றுகோரி ஜே. வி. பி. நேற்றுமுன்தினம் அம்பாறையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

காலை10 00 மணிக்குஆரம் பமான ஆர்ப்பாட்டம் 11.00 மணிவரை நடைபெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்தை ஜே. வி. பி. எம். பிக்களான அனுரா குமார திஸநாயக்க,

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜீவரட்ணம் ஸ்தபதியின் மறைவு பேரிழப்பாகும்

### ஆதீன சுவாமிகள் அனுதாபம்

உயிர்ப்புள்ள கலைப் படைப்புகளை தந்து இந்து சமயத்தின் கலாசாரத்தை பேணிக்காத்த அமரர் ஜீவ ரட்ணம் ஆச்சாரி அவர்க ளின் மறைவு கலைஉலகிற்குப் பேரிழப்பாகும்.

இவ்வாறு சிற்பச்சக்கர வர்த்தி ஜீவரட்ணம் ஆச் சாரி ஆவர்களின் மறைவு குறித்து நல்லை ஆதீன முதல் வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவமிகள்விடுத்த அனுதாபச் செய்தியில் தெரி வித்துள்ளார்.

அச்செய்தியில் ஸ்தபதிஜீவ ரட்ணம் போன்றவர்களால் எமது கலைப் படைப்புக்கள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளி நாடுகளிலும் நிலை நாட்ட முடிந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது [5]

## 380 குடும்பங்களின் வீட்டுவசதிக்கு ரூ. 10ஆயிரம்

### ஜெகன் எம். பி வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர், ஊர்காவற்றுறை, சங்கானை மற்றும் சண்டிலிப் பாய் பிரதேச செயலர் பிரிவு களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 380 குடும்பங்களுக்கு வீட்டு வசதியினைச் சீர்ப்படுத் துவதற்காக 10 ஆயிரம் ரூபா நேற்றுவழங்கப்பட்டது.

ஈ. பி டி. பி. யின் யாழ் மாவட்டத் தலைமைச்செயல கத்தில் ஈ. பி. டி. பி யின் யாழ் மாவட்ட பிரதமஅமைப் பாளரும் பாராளுமன்றஉறுப் பினருமான கே. வி குகேந்தி

நிதியுதவி வழங்கும் வைபவம் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன், பாரா ளுமன்ற உறுப்பினர் சி. தவராசா ஆகியோர் நல்லூர், சங்கானை, சண்டி லிப்பாய் பிரிவு குடும்பங்களுக் குரிய 10 ஆயிரம் ரூபா பெறு மதியான காசோலையை வைபவ ரீதியாக வழங்கியிருந் தார்கள். ஊர்காவற்றுறப் பிரதேச செயலர் பிரிவுக்குரிய குடும்பங்களுக்குரிய காசோ லையை ஈ. பி. டி. பி. யின்

## புலிகள் மீதான தடையை நீக்குக எண்ணம் அரசுக்கு கிடையாது!

### நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் நோக்கம் எதுவும் அரசிற்கு இல்லை என்று நீதிஅமைச்சர் பட்டி வீரக்கோன் குறிப்பிட் டுள்ளார் என்று செய்தி நிறு வனம் ஒன்று தெரிவித்துள் ளது:

அந்த செய்தி நிறுவனம் மேலும் தெரிவிக்கையில் சமா தான பேச்சுவார்த்தைக்கு உதவியாக தமிழீழ விடுத லைப் புலிகள் மீதான தடை யைதற்காலிகமாக நீக்கு வதற்குக் கூடஅரசு யோசிக்க வில்லை என்றும் அமைச்சர் பட்டி வீரக்கோன் குறிப்பிட் டுள்ளார்;

தம்மீதான தடையை நீக்கு மாறு விடுதலைப் புலிகள் நோர்வே தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் மூலம் அரசைக்கோரி யிருந்தமை தெரிந்ததே:

## புலிகளின் தடையை நீக்க

ஹெய்ம் மூலம் அரசைக்கோரி யிருந்தமை தெரிந்ததே: [வ]

பாளரும் பாராளுமன்றஉறுப் பினருமான கே. வி குகேந்தி ரன் தலைமையில் வீட்டுவசதி

குடும்பங்களுக்குரிய காசோலையை ஈ. பி. டி. பி. யின்

(8-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடையை நீக்க இ.தொ.க. ஆதரவு வழங்கும்

### அமைச்சர் ஆறுமுகம் தகவல்

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை சமாதானபேச் சிற்குஇடைஞ்சலாக இருந்த தால் அத்தடையை நீக்குவ தற்கு அரசுமுடிவு செய்தால் அதற்கு இ. தொ. காங்கிரஸ் ஆதரவு வழங்கு மென்று காங் கிரசின்செயலாளரும், அமைச் சருமான ஆறுமுகம் தொண் டமான்தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மேலும்தெரி விக்கையில், அரசுக்கும், விடுத லைப்புலிகளுக்கு மிடையி லான பேச்சுவார்த் தைக்கு விடுதலைப் புலிகளின் தடை முட்டுக்கட்டையாகஇருப்பின் அத்தடையை நீக்குவதற்கு ஆதரவு வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச அரசு அக்கறையுடன் உள்ளது

[கொழும்பு]

அரசுக்கும் விடுதலைப் புலி களுக்கு மிடையிலானசமாதா னப் பேச்சுக்களை ஆரம்பிப் பதில் சிறிதளவு பின்னடைவு ஏற்பட்டுள்ளபோதும்: அரசாங்கம் யுத்தத்தை நிறுத் துவதிலும் சமாதான சமரசப் பேச்சுக்களை ஆரம்பிப்பதி லும் மிகவும் அக்கறையுட னேயே செயற்பட்டு வருகி ன்றது:

மாகாண சபைகள் உள்ளு ராட்சி அமைச்சர் நந்தமித்திர எக்நாயக்க மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் யுத்தம் நிறுத்தப் பட வேண்டுமென்பதில் நான் மிகவும் தீவிரமாக இருக்

(8-ம் பக்கம் பார்க்க)

## உடைக்கப்பட்ட கோட்டைக்குள் மீண்டும் இராணுவ முகாம்?

யாழ்ப்பாணம் கோட்டை யில் மீண்டும் முகாம் அமைப் பதற்கான ஏற்பாடுகளை இராணுவத்தினர் மேற் கொண்டு வருவதாக தெரிய வருகிறது:

கோட்டைப் பகுதியைசுற்றி யும், கோட்டை முனீஸ்வரன் ஆலயப் பகுதியை சுற்றியும் உள்ள பற்றைகள், புதர்கள் யாவும் இராணுவத்தின ரால் புல்டோசர் கொண்டு அழிக்கப் பட்டுவருகிறது.

கோட்டைப் பகுதியைசுற்றி வரையுள்ள முட்புதர்களை யும் இராணுவத்தினர் நேற்று முதல் துப்பரவு செய்யும்பணி யில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ் கோட்டையைச்சுற்றி யுள்ள முட்புதர்கள் துப்பரவு செய்யும் பின்னணியில் இரா ணுவத்தினர் மீண்டும் யாழ் கோட்டைக்குள் முகாமிட லாம் என்றும் கடலோரப் பாதுகாப்பிற்கு கோட்டைக் குள் இராணுவமுகாம் அவசி யம் அமைக்கப் பட வேண்டி யுள்ளதாகவும் அதன் பாது காப்பைஉறுதிப்படுத்தகோட் டையைசுற்றிவர காவலரண் கள் அமைக்கப் படலாம் என் றும் தெரிவிக்கப் படுகிறது: [ம]

## வீடுபார்க்கச்சென்றவர்கள் அரிசி மூட்டையுடன் திரும்பினர்.

தச்சன் தோப்புப் பகுதியில் வீடுகளைப்பார்க்கச் சென்ற வர் அங்குள்ளவீடுகளில் வைக் கப்பட்டிருந்த அரிசி மூட்டை களை தமது சைக்கில்களில் கட்டிவந்ததை அவதானிக்க முடிந்தது:

தச்சன்தோப்புப் பகுதியில் உள்ள வீடுகளைப் பார்க்கச் சென்று திரும்பிய வர்களே அங்குள்ள வீடுகளில் "காணப் பட்ட அரிசி மூட்டைகளை எடுத்துவந்தனர்.

தென்மராட்சிப் பகுதியின் மேற்குப்பிரிவில் உள்ள தச்சன் தோப்புவரை இடம்பெயர்ந்த குடும்பங்கள் இராணுவத்தின ரின் அனுமதி பெற்று தங்கள் வீடுகளை பார்பதற்கு நேற்று சென்றிருந்தனர். (ம-77)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### பரு.வைத்தியசாலையில்

# நோயாளர் தொகைஅதிகரிப்பு

# மருந்துகளுக்கும் தட்டுப்பாடாம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

நீரிழிவு மற்றும் தொற்று நோய், மனநோய், இரத்த அழுத்தம் ஆகிய வற்றிற்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கே தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதே வேளை, அண்மைக் கால யுத்த அனர்த்தங்களால் தென்மராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் இவ் வைத்தியசாலையை அண்டிய பகுதிகளில் வசிக்கின்றமையால் அதிகளவான நோயாளர்கள் இவ் வைத்தியசாலையை நாடுகின்ற காரணத்தினாலேயே அங்கு அடிக்கடி மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-23)

## 20 வெளிநாட்டவர்களும் விரைவில் விடுதலையாவர்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 20வெளிநாட்டவர்களைவிரைவில்விடுதலைசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ள தாகசட்டமா அதிபர்தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் தமமை விடுதலை செய்ய வேண்டும் அல்லது விசாரணை செய்ய வேண்டும் எனக்கோரி கடந்த வாரம் உண்ணாவிரதம் இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நீர்கொழும்பு நீதி மன்றத்தில் அதிகமான வழக்குகள் விசாரணைக்கு இருப்பதால் இந்த வழக்குகளை விசாரணை செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாக சட்டமாஅதிபர்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-5)

### பயங்கரவாதிகளுக்கு நிதி சேகரிப்பு

## தடை செய்யும் சட்டம் சுவிஸ் நிறைவேற்றம்

(கொழும்பு)

பயங்கரவாதத்தை முறியடிக்கும் ஐ.நா.வின் பிரகடனத்தை சுவிஸ்லாந்து அங்கீகரித்துள்ளது.

இதன்படி பயங்கரவாதச் செயல்களுக்கு நிதிசேகரிக்கும் நடவடிக்கைகளை தடைசெய்யும் சட்டத்தை சுவிஸ் சமஷ்டிக்கவுன்சில் மே மாதம் 16 ஆம் திகதி நிறைவேற்றியுள்ளது.

இதனால் பயங்கரவாத அமைப்புகள் நேரடியாகவோ அல்லது தமது முன்னணி அமைப்புக்களின் மூலமாகவோ நிதிசேகரிப்பது முடியாத காரியமாகியுள்ளது.

ஐ.நா. 1999 ஆம் ஆண்டு டிசெம்பரில் மேற்படி, பிரகடனத்தைச் செய்ததன்பின் இதுவரை 42 நாடுகள் இதில் கைச்சாத்திட்டுள்ளன. இலங்கை 2000 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி இப் பிரகடனத்தில் ஒப்பமிட்டுஏற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வலிகாமம் மேற்கில் கலாசாரப் பேரவை

### அண்மையில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்குப் பகுதியில் கலைத்துவத்தை வளர்க்கவும், அங்குள்ள இளங்கலைஞர்களின் திறமைகளை இனங்கண்டு அவற்றை வளர்க்கவும் முதிய கலைஞர்களை கௌரவிக்கவும் கலாசாரப் பேரவை ஒன்று மிக அண்மையில் அமைக்கப் பட்டுள்ளது.

அதன் தலைவராக உடுவில் பதில் பிரதேச செயலர் க. தேவீஸ்வரன், செயலாளராக உடுவில் பிரதேசசெயலக கலாசார உத்தியோகத்தர், செல்வி பி. சத்தியவாணி, பொருளாளராக ந. காவிவேந்தன் ஆகியோரும், உறுப்பினர்களாக 6 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக் கலாசார சபையின் ஆலோசகராக பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (உ-2)

## ஆன்மீகக் கருத்தரங்கு

(மந்திகை)

பருத்தித்துறை சாரதா சேவாச்ரமத்தின் ஏற்பாட்டில் ஆன்மீகக் கருத்தரங்கு எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில், அதிபர் என் சிவகடாட்சம் தலைமையில் இடம்பெறவுள்ளது

அன்றைய தினம், 'சுவாமி விவேகானந்தரின் செய்தி'' என்ற பொருளில் சுவாமி சித்ருபானந்தா ஆன்மீக உரை நிகழ்த்துவார். (உ-23)

## மாதர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி (ஜே 101) மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3. 00 மணிக்கு யாழ். இந்துஆரம்பப்பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சங்க அங்கத்தவர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப் பழனி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் யூன் மாதம் 3 ஆம் திகதி இரதோற்சவமும் 4 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது (செ)

### வணிகர்களுக்கு

## அழைப்பு

[மந்திகை]

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினார் சாவகச்சேரி நகர் சென்று தமது வர்த்தகநிலையங்களைப்பார்வையிடாதவர்த்தகர்களை உடன் தம்முடன்தொடர்பு கொள்ளுமாறும்,

வர்த்தக நிலையம் சேதமடைந்தமையை உறுதிப் படுத்தும் பொலிஸ் முறைப்பாட்டை ஒப்படைக்குமாறும் அறிவித்துள்ளனர்.[ உ-23

## அமைச்சரின் மகன் பிணையில் விடுதலை

(கொழும்பு)

மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தைக் கடத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த புத்தசாசன பிரதியமைச்சர் எதிர்வீர பிறேமரத்னவின் மகனை கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி எஸ். ஐ. இமாம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

மகனை பிணையில்செல்ல அனுமதிக்குமாறு பிரதியமைச்சர் பிணைமனுவை தாக்கல் செய்திருந்தார்.

2 இலட்சத்து 00 ஆயிரம் ரூபா காசுப் பிணையுடன், தலா ஒன்பது இலட்சம்ரூபா பொறுப்புநிற்கும் இரு பிணையாளிகளின் பொறுப்பில் பிணை அனுமதிக்கப்பட்டது.

சாட்சிக்காரரை துன்புறுத்தக்கூடாது, வெளிநாடு செல்லக்கூடாது, கடவுச்சீட்டை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் இவர் விடுவிக்கப்பட்டார். (உ)

## கட்டாக் காலிகளால் தொல்லை

[வட்டுக்கோட்டை]

வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை, அராலிப் பகுதிகளில் 'கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

விவசாய சம்மேளனங்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கால்நடைகளைவளர்ப்பவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை விடுத்த போதிலும், அதனையும் மீறி அவர்கள் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-24)

## மருந்துக் களஞ்சியம் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனாவைத்தியசாலைக்கு 70 லட்சம் ரூபா செலவில் புதிய மருந்துக் களஞ்சியம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை இரத்த வங்கிக்குமுன்பாக இக்களஞ்சியம் அமைக்கப்பட்டு வருகின்றது.

பல வருடங்களுக்கு முன்பே இதற்கான அத்திவாரம் இடப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் நிதி இன்மையால் இப்பணி நிறுத்தப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது சுகாதார அமைச்சு இதற்கான நிதியை ஒதுக்கியிருப்பதனால் கட்டிட அமைப்பு வேலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (உ-4)

## கசிப்பு ஒழிப்பு குறித்த மாநாடு குருநகரில் ஜூனில் நடக்கும்

யாழ். மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கசிப்பு உற்பத்தி விற்பனைகளை ஒழிப்பது சம்பந்தமாக நேற்று முன்தினம் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரின் ஏற்பாட்டில் மேயர் ரவிராஜ் தலைமையில் நாவலர் மண்படத்தில் கலந்துரையாடல் கூட்டமொன்று இடம் பெற்றது.

இக்கூட்டத்தில்மாநகர சபை உறுப்பினர்களான சுபத்திரன், தவநாதன் ஆகியோர் உட்பட மாநகர சபையின் பதில் சுகாதார வைத்திய அதிகாரி மரியதாஸ், சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் சிவலிங்கம், மற்றும் மதகுருமார், சனசமூகநிலையங்களின் நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சமூக விரோத நடவடிக்கையான கசிப்பு உற்பத்தி, விற்பனையை மாநகர சபையின் எல்லைக் குட்பட்ட பகுதிகளிலிருந்து இல்லா தொழிப்பதற்கான ஆலோசனைகள் ஏற்பாட்டாளர்களால் பெறப் பட்டது. கூட்டத்தின் இறுதியில் கசிப் பொழிப்பு சம்பந்தமான தீர்மானங்கள் சிலவும் எடுக்கப்பட்டன.

அவை வருமாறு;

கசிப்பொழிப்பு தொடர்பாக நீதிபதிகள், மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் மதகுருமார், சனசமூக நிலைய உறுப்பினர்கள் கிராம அலுவலர்கள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தல்.

யூன் மாதம் சிறு ஊர்வலம் ஒன்றை நடாத்திச் சென்று குருநகர் பகுதியில் மாநாடு ஒன்றை நடாத்துதல்;

கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்களை அமைத்தலும் அதற்கு சில அதிகாரங்களை பெற்றுக் கொடுத்தலும்.

கசிப்பு உற்பத்தி விற்பனையில் தொடர்புடையோருக்கு மறுவாழ்வு அழிக்கும் பொருட்டு புனர்வாழ்வு நிலையங்களை அமைத்தல், கலை நிகழ்வுகள் மூலம் கசிப்பொழிப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தல், பெண்களையும் கசிப்பொழிப்புத் திட்டத்தில் ஈடுபடுத்தல் என்பன அத் தீர்மானங்களாகும். (உ-2)





நல்லூர்பிரதேச சபை
திருநெல்வேலி

**ஆதனவரி மீள்மதிப்பீடு**

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப- அலுவலகத்திற்கு உட்பட்ட சகல ஆதன வரிகளின் மீள் மதிப்பீடு 04/06/2001 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடை பெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். எனவே வரியிறுப்பாளர்கள் இது சம்பந்தமாக வரும் உத்தியோகத்தர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன்கேட்டுக் கொள்கிறேன்.

மணிபல்லவராஜன்
(ஜே.பி யு.எம்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர்பிரதேசசபை,
திருநெல்வேலி,
24. 05. 2001.


### மெய்கண்டான் ம. வி

## மைதானத்தின் மத்தியில் மலசலக்குழி மாணவர்கள் மத்தியில் அதிருப்தி

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தின் மத்தியபகுதியில், அப்பகுதியில் குடியேறியுள்ளவர்களால் மலசலக் குழி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இதை எதிர்க்கும் முகமாக அப்பாடசாலை மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஊர்வலமாக வலிமேற்கு பிரதேச சபைக்குச் சென்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மல்லாகம் நீதிமன்றத்தின் தடை உத்தரவையும் மீறி பாடசாலை செயற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கும் முகமாக மேற்கொள்ளப் பட்டுவரும் இம் முயற்சியை உடன் நிறுத்த வேண்டுமென மாணவர்கள் பிரதேசசபைத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் திரிலோகநாதன் மாணவர்களை, வகுப்பை பகிஷ்கரிப்பதை நிறுத்தி கல்வியைத் தொடருமாறும் இப் பிரச்சினை சம்பந்தமாக தான் உடன் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்ததையடுத்து மாணவர்கள் அமைதியாக கலைந்து சென்றனர்.

மேற்படி விடயம் தொடர்பாக திரிலோகநாதனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, இது விடயம்தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர்களின் கவனத்தின்கீழ் கொண்டு வந்திருப்பதாகவும்,

இந்த விடயம் பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்கும்படி அரச அதிபர் தன்னைக் கேட்டிருப்பதாகவும் தெரிவித்தார். [உ-59]

## பனைவள உற்பத்தியுடன் தொடர்புடைய மக்களின் சமூகநல மேம்பாட்டிற்கு விசேட திட்டங்கள் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையின் நிர்வாகம் பனை அபிவிருத்திச் சபையின் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டதன் பின்னர் அதன் உற்பத்தித் திறன் இருமடங்காக அதிகரித்துள்ளது

அண்மையில் வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் திக்கம் வடிசாலையின் உற்பத்தித் திறன்பற்றிய உரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பங்குபற்றிய பனை அபிவிருத்தி சபைத்தலைவர் க. பாக்கியநாதன் கருத்துத் தெரிவிக்கையில்; திக்கம் வடிசாலை வடமராட்சியின் பனை. தென்னை வள கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியின்கீழ் உள்ளபோது 12 ஆயிரம் போத்தல் கள்ளினை கொள்வனவு செய்து மதுசாரத்தினை வடித்து வந்தது.

ஆனால் இன்று பனை அபிவிருத்திச் சபையின் பொறுப்பின்கீழ் திக்கம் வடிசாலை நிர்வாகம் கொண்டுவரப்பட்டதை அடுத்து 23 ஆயிரம் போத்தல் கள்ளினை கொள்வனவுசெய்து மதுசாரம் வடிக்கப்படுகின்றது என தெரிவித்தார்.

வடிசாலைக்கு வழங்கப்பட்ட வரிவிலக்கு சலுகையைப் பயன்படுத்தி பனைவள உற்பத்தியுடன் தொடர்புடைய மக்களின் சமூகநல மேம்பாட்டிற்கு விஷேட திட்டங்களை நிறைவேற்றுவதுடன் வடிசாலையின் தரம் உயர்த்தப்படவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

திக்கம் வடிசாலையின் உற்பத்தித் திறன்அதிகரிக்கப்பட்டதை அடுத்து தொழிற்சாலைக்கு மாதாந்தம் ஐந்து இலட்சம் ரூபா நிகர லாபம் கிடைப்பதாகவும் இந்த இலாபப் பணத்தினைக் கொண்டு தொழிற்சாலை நவீன முறையில் விஸ்தரிக்கப்படவுள்ளதுடன் தொழிற்சாலையுடன் தொடர்புடைய தொழிலாளர்களின் நலன்களைப் பேணும் வகையில் விஷேட திட்டங்கள் அமுல்ப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது வடிக்கப்படும் சாராயத்தின் தரத்தினைக் கூட்டுவதற்காக மரக்கொள்கலன்களில் நீண்டகாலங்களுக்கு பாதுகாத்து வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முன்னைய நிர்வாகத்தின்போது வடிசாலையில் மர சொள்கலன்கள் இருந்த போதிலும் இவற்றை பயன்படுத்தி தரமான சாரயத்தை உற்பத்தி செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலையின் மேலதிக விஸ்தரிப்புக்காக வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாவினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடன் அடிப்படையில் ஒதுக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## நெஞ்சுவலியால் தவித்தவரை படையினர் கூட்டிச் சென்றனர்

[சுண்டுக்குளி]

காங்கேசன்துறைக்கு நேற்று முன்தினம் வந்தடைந்த கப்பலில்பயணம் செய்த ஒருவர் நெஞ்சுவலியால் பாதிக்கப்பட்டுள்ளார்:

புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த சிவஞானம் (வயது-45) என்பவரே நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்டவராவார்.

கப்பலில் பயணித்த சிறுவர் நலன்புரிஅமைப்பைச் சேர்ந்த பெண் வைத்தியர் ஒருவரால் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்ட பின் அவரை படையினர் தமது வைத்தியசாலைக்கு கூட்டிச்சென்றுள்ளனர்; (உ-110)

## நவீனத்துவம் மிக்க தும்புப் பயிற்சி நிலையம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளியில் இருந்து இடம்பெயர்ந்து வல்வெட்டித்துறைப் பகுதி முகாம்களில் வசிக்கும் மக்களின் நலன்கருதி பளைப் பிரதேச செயலகத்தினால் தும்புப் பயிற்சி நெறி நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் மேற்படி முகாம் அருகில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பயன்படுத்துவதற்கென தொழிற்றுறைத் திணைக்களத்தினால் மின்சக்தியில் இயங்கும் நவீனரகத் தும்படிக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட கிழக்கு மாகாணத் தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் கலந்துகொண்டு, தொழிலகத்தை ஆரம்பித்து வைப்பார்; (உ)

## கிணற்றுள் வீழ்ந்து மாணவி மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தண்ணீர் அள்ளிய வேளை தவறி வீழ்ந்த சிறுமி பரிதாபகரமாக மரணமானார்.

கடந்த புதனன்று மாதகல் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மாதகல் விக்கினேஸ்வராக் கல்லூரி மாணவியான கந்தசாமி சிவரஞ்சினி (வயது 10) என்பவரே மரணமானவராவார். (உ-9)

## வங்கி நடை முறைகளை முன்னெடுக்கும் வகையில் சிறு குழுக்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் ஐந்து பேரைக் கொண்ட சிறுகுழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றனர்;

இக்குழுத் தெரிவின் மூலம் வங்கி நடைமுறை ஒன்று முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளதாகஅப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் சுமார் 15 குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இதுவரை மேற்படி பிரிவில் சுமார் 350 சிறு குழுக்கள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர், [உ-2

## இராசி பலன்

26/5/2001
(வைகாசி 12, சனி)
சதுர்த்தி பி.இ 2.17 வரை
திருவாதிரை மு.ப9.43 வரை
ராகுகாலம் 8.52 – 10 22
நல்ல நேரம் 2.52 – 1 22
சித்தம், சதுர்த்தி விரதம்

**மேடம்**
தனவரவு, காரிய நன்மை, குடும்ப சுகம், வாக்குப் பலிதம்,

**இடபம்**
உஷ்ண ரோகம், வீண் விவாதம், பொருள் விரயம், காரிய தாமதம்.

**மிதுனம்**
ஜனவசியம், பெரியோர் ஆசி, புதியபொருள் சேர்க்கை கற்பனை மிகுதி.

**கடகம்**
நித்திரைக் குறைவு, தன விரயம், முயற்சி தாமதம், அலைச்சல்.

**சிங்கம்**
காரியஜெயம், மன மகிழ்ச்சி, கௌரவம், குடும்ப சுகம்.

**கன்னி**
கீழ்ப்படிவு, முயற்சிகள் கைகூடும், சந்தோசமான நிகழ்வு, தொழில் மேன்மை.

**துலாம்**
மனப்பயம், வயிற்றுக் கோளாறு, புதிய திட்டம், இடமாற்றம்.

**விருச்சிகம்**
வீண் பிரச்சினை, மனக் கிலேசம். நல்ல உணவுகிடைத்தல், காரிய தடங்கல்,

**தனுசு**
உல்லாசம், தனவரவு, காரியம் கைகூடும், நல்ல உணவு கிடைத்தல்,

**மகரம்**
தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி, ஆரோக்கியம், முயற்சி ஜெயம்.

**கும்பம்**
காரிய இடையூறு, கௌரவக் குறைவு, குடும்பக்கவலை, வியாதி.

**மீனம்**
உறவினர் மனஸ்தாபம், அரச ஆதரவு, காரிய தாமதம், மனச் சஞ்சலம்,

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது;

வளவன்

(வேலணைமேற்குபெரிய புலம்முடிப்பிள்ளையார் கொடியேற்றத்தை ஒட்டியகவிதை)

### திருக்கோலம் காட்டி

வேழமுக விநாயகனின் விழாக்கோலம்
வேண்டிடும் அடியார்கள் அருட்கோலம்
வேலணையில் பாலனைந்த கணபதிக்கு
வருகின்ற கொடியேற்றம் இன்றாகும்

காணாத அதிசயங்கள் அடியார்க்கு
காட்டிநிதம் அருள்புரியும் கணபதியே
தீவுகளின் நாயகமாம் வேலணையில்
திருக்கோலம் காட்டியெமைக் காப்பாயே

வேலணை பாலா
அ.இ.47

(இன்று இருபாலை வேளாதோப்பு முருகன் கொடியேற்றத்தையொட்டிவெளிவரும் கவிதை)

### வயல்வெளியில் கொடியேற்றம்

பூச்சொரிய நிலாப்பார்க்கும் பூமியிலே
புள்ளிமயில் வேலவன் கொடி பேறுகின்றான்
பால்சொரிய வயல்பார்க்கும் பூமியிலே
பாலசுப்பிரமணியனுக்கு கொடியேற்றம்

வயல் வெளியில் வீற்றிருக்கும் முருகனுக்கு
வண்ணத் தமிழ் வாழ்த்திசைக்க கொடியேற்றம்
புயலதடுத்த வேளாதோப்பு வேலனுக்கு
புலம் பெயராத மக்களின் கொடியேற்றம்

நல்லை அமிழ்தன்

## விசாரணைகளுக்கு சமுகமளிக்கக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டிலிருந்து 96, 97ம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை நடாத்தி வரும்விஷேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பின்வரும் உறவினர்கள, சாட்சிகள், முறைப்பாட்டு நபர்களை உடன் யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு சாட்சியம் வழங்குமாறு பணித்துள்ளனர்.

★ கதிரவேற்பிள்ளை கேதீஸ்வரன்.
சாட்சி:- கேதீஸ்வரன் மனோகரன். கைதடி நாவற்குழி.

★ கனகசூரியன் சசிகரன் [பி-50]
சாட்சி:- நடேசு கனகசூரியன்.

★ ஜெயாத்தம்பி உதயகுமார் (பி-2)
முறைப்பாடு:- கார்த்திகேசு கோவிந்தப்பிள்ளை.
சாட்சி:- ஐயாத்தம்பி தெய்வானைப்பிள்ளை.

★ அப்பாக்குட்டி நாகராசா [ஏ-3]
முறைப்பாடு:- நாகராசா திலகவதி மீசாலை வடக்கு

★ வல்லிபுரநாதன் பவானந்தன் [பி-21]
சாட்சிகள்:- நீலாபபிகை வல்லிபுரநாதன் கச்சாய்வீதி, கொடிகாமம்
ஸ்ரீ சத்தியராசா, வல்லிபுரநாதன் பவானி சின்னத்தம்பி ஏகானந்தராசா

★ சின்னத்தம்பி சிவகுமார் [ஏ-13]
முறைப்பாடு:- சிவகுமார் விஜயா. நாவற்குழி கிழக்கு, தச்சன் தோப்பு.

★ சிதம்பரப்பிள்ளை [illegible]பநாதன் [பி-135]
முறைப்பாடு:- சபாபதி சிதம்பரப்பிள்ளை
சாட்சி:- கௌரி 105/3, கைதடி தெற்கு, சாவகச்சேரி;

★ ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிக்ற் [பி-11]
முறைப்பாடு:-மரியரஞ்சன் உயரப்புலம் ஆனைக்கோட்டை
சாட்சி:-மேரிரதிகா

★ அப்புத்துரை ஜெயரட்ணம். [பி 34]
முறைப்பாடு:- அப்புத்துரை ஞானேந்திரன். 13/393, கோயில் வீதி, நல்லூர்.

★ இளையதம்பி திருபவானந்தன் [பி-39]
முறைப்பாடு:- இளையதம்பி ஆசையம்மா. மந்துவில் கிழக்கு கொடிகாமம்;

★ சுப்பிரமணியம் இராசமணி பி 99
முறைப்பாடு:- சுபபிரமணியம் செல்வராணி மூளாய் சுழிபுரம்.
சாட்சிகள்:- செல்வராணி விஷ்ணு. சங்கானை

★ பொன்னன் ரவீந்திரன் (ஏ-11)
முறைப்பாடு:- ரவீந்திரன் ஜெராணி கைதடி கிழக்கு.

★ தர்மலிங்கம் சுதாகரன் நடராசா ஜெயராசா [பி-4]
முறைப்பாடு:- தர்மலிங்கம் சுதாகரன்
சாட்சிகள்:- கணபதிப்பிள்ளை நடராசா 78, கண்டி வீதி, யாழ்ப்பாணம். ஜெயராசா, நடராசா சிவக்கொழுந்து, தங்கையா சண்முகம, மீசாலை வடக்கு மீசாலை.
கார்த்திகேசு நடராசா, நடராசா நவமணி, நடராசா ஜெயந்திரன்.

★ ஜெயராசா ஜெகன் (பி-71)
முறைப்பாடு:- ஜெயராசா லீலாவதி லெனின்[illegible]கு வில் மேற்கு.
சாட்சிகள்:- ஜெயராசா ஜெயகௌரி, பொன்னையா, தம்பாலசிங்கம செல்வரஞ்சினி சுண்டுக்குளி கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ கந்தையா சிறீகரன் (பி-73)
முறைப்பாடு:- கந்தையா பொன்னம்மா மிருசுவில் சாவகச்சேரி.

★ சந்தவனம் சுதாஸ் (ஏ 72)
முறைப்பாடு:- சந்தவனம் ஜெகமகேஸ்வரி கோப்பாய் மததி.
சாட்சி:- சின்னத்துரை கந்தவனம, ரவீந்திரன்.

★ இராசையா சசிநதன் (பி-63)
முறைப்பாடு:- இராசையா செல்வரட்ணம நவாலி வடக்கு மானிப்பாய்.
சாட்சிகள்:- அழகராசா தனபாலரட்ணம

★ சுரேஸ்வரன் சுமதி (பி-67)
முறைப்பாடு:- கந்தையா சொக்கலிங்கம் ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
சாட்சி:- கிருஸ்ணபிள்ளை அரியாலை கொழுபபுத்துறை;

★ துரை தங்கத்துரை (பி-68) மூத்த விநாயகர் கோவிலடி கரணவாய்.
சாட்சிகள் : அர்விந்தன் துரை பாலச்சந்திரன்.

(6ஆம் பக்கம் பார்க்க)

க.பொ. த உயர்தர மாணவர்க்கான

# உயிரியல்

## பாட வினாக்கள் - 15

ஆசிரியர் கே. சுகந்தன் B.Sc

### மாதிரி வினாக்கள்

**வினா 1**

i) நொதியம் என்றால் என்ன?

1) ii) நொதியங்களின் சிறப்பியல்புகளை நிரற்படுத்துக?

iii) நொதியத்தாக்கப் பொறிமுறையைச் சுருக்கமாக விளக்குக?

vi) ஒரு தயற்றேசுக் கரைசலின் தொழிற்பாட்டையும் சுக்குரேசுக் கரைசலின் தொழிற்பாட்டையும் எவ்வாறு வெப்ப நிலை பாதிக்கும் என ஆராய ஆய்வு கூடத்தில் நீர் செய்யக் கூடிய பரிசோதனைகளை விபரிக்க?

v) நொதியத் தொழிற் பாட்டைப் பாதிக்கும் காரணிகளைத் தந்து அவை எவ்வாறு பாதிக்கின்றன என சுருக்கமாக விபரிக்க?

vi) சுக்குரேசு நொதியத்தின் உயிர்ப்பைக் காட்ட மேற் கொள்ளக் கூடிய பரிசோதனையைத் தருக?

vii) பீற்றூட் சாற்றில் தாழ்த்தும் வெல்லமும் தாழ்த்தா வெல்லமும் உண்டு என்பதை எவ்வாறு உறுதிப்படுத்தலாம்?

viii) குளுக்கோஸ் கரைசல், சுக்குரோசுக் கரைசல் 0 5% மாப்பொருள் கரைசல் 1 % மாப்பொருள் கரைசல், இன் வட்டேஸ் கரைசல், காய்ச்சி வடித்தநீர், ஆமணக்கு வித்தின் சாறு என்பவற்றைத் தனித்தனியாக கொண்டுள்ள ஏழு போத்தல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு போத்தலிலும் அடங்கியுள்ளவற்றை இனங்காண்பதற்காக நீங்கள் கையாளும் வழி முறைகளைத் தருக?

உங்களுக்கு பன்சன் சுடரடுப்பு, பரிசோதனைக் குழாய்கள், பீலிங்கின் கரைசல்கள், ஐதான அயடின் கரைசல், நிறுத்தற் கடிகாரம், பொட்டு ஓடு, துளிக்கும் குழாயி, வழுக்கிகள், நுணுக்குக் காட்டி, சூடான் iii) கரைசல் என்பனவும் தரப்பட்டுள்ளன.

**வினா-2**

1) i) Phylum: Porifera இன் பொது இயல்புகளை நிரற்படுத்துக?

ii) இக்கணத்தினுள் அடங்கும் வகுப்புக்களையும் அவற்றைச் சிறப்பிக்கும் இயல்புகளையும் தருக?

iii) Phylum- Cnidaria ,coelenterata இன் பொது இயல்புகளை நிரற்படுத்துக?

iv) Phylum:- Cnidar?i இனுள் அடங்கும் வகுப்புக்களையும் அவற்றைச்சிறப்பிக்கும்இயல்புகளையும் தருக

v) Phylum- Platyhelminthes இன் பொது இயல்புகளையும் இதனுள் அடங்கும் வகுப்புக்களையும் இவ் வகுப்புகளின் சிறப்பியல்புகளையும் தருக?

**வினா 3**

1) உரியத்தினால் கொண்டு செல்லல் பற்றி ஒரு கட்டுரை எழுதுக?

2) காழின் ஊடாக சாற்றேற்றம் நிகழல் பற்றி ஒரு கட்டுரை எழுதுக?

3) அமில மழை, பூகோளம் வெப்பமடைதல், ஓசோன்படை அழிக்கப்படல் என்பனமூன்று பிரதான உலக சூழற் பிரச்சினைகளாகும்.

a) மேற்கூறப்பட்ட மூன்று பிரச்சினைகளுக்கும் பங்காற்றும் பதார்த்தங்களை நிரற்படுத்தி, அவை தோன்றும் முதல்களைக் குறிப்பிடுக?

b) மேலே கொடுக்கப்பட்ட பிரச்சினைகளை ஒவ்வொன்றினதும்விளைவுகளை விளக்குக?

c) இம் மூன்று பிரச்சினைகளையும் எவ்வாறு தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம்?

**வினா 4**

1) a) DNA மூலக் கூறின் கட்டமைப்பை வர்ணிக்க?

b) மீளச் சேரும் DNA தொழில் நுட்பம் என்றால் என்ன?

c) மீளச் சேரும் DNA தொழில் நுட்பத்தின் பிரயோகங்களை விளக்குக?

d) பிறப்புரிமை ரேகைப் பரிசோதனையில் DNA probe, DNA இன் இயல்பு மாற்றம், Southern blotting, mini Satellites போன்ற பதங்களை விளக்குக?

e) பிறப்புரிமை ரேகைப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் முறைபற்றி சுருக்கமாக விளக்குக?

f) பிறப்புரிமை ரேகைப் பரிசோதனையின் பிரயோகங்களை விளக்குக?

2) 1) பிரியிலுழயம் என்றால் என்ன?

2) பிரியிலுழயத்தை, உற்பத்தியையும் காணப்படும் இடத்தையும் அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தி தகுந்த உதாரணங்களும் தருக?

3) இருவித்திலைத் தண்டின் சுற்றளவு அதிகரிக்கும் முறையை விளக்குக?

### விடைகள்

வினா இல.11

**வினா - 1**

அ) i) Watson and Crick
ii) Deoxyribo nucleotide
iii) Deoxyribose, phosphate group, N-base.
iv) அடினின், குவானின்.
v) பியூரின்

ஆ) i) DNA இரட்டித்தல்.
RNA தொகுப்பு.
ii)

| வகை | உற்பத்தியாகும் இடம் | தொழில் |
|---|---|---|
| mRNA | கரு | புரதத் தொகுப்பிற்குரிய செய்தியைக் காவுதல் |
| tRNA | கரு | புரதத் தொகுப்பிற்குரிய அமினோ அமிலங்களைக் காவுதல் |
| rRNA | புன்கரு | புரதத் தொகுப்பு |

iii) 1) ATGGTCATG
2) AUGGCUAUG

இ) i) C, H, O, N, P
ii) பிறப்புரிமைத் தகவல்களைச் சேமித்தலும் அடுத்தடுத்த சந்ததிகளுக்குக் கடத்தலும்.
iii) கரு, இழை மணி, பச்சைய உரு மணி.
iv) புன்மையத்தி.
v) இழை மணி, பச்சைய உரு மணி.

ஈ) i) இரட்டை விரிபரப்புச் சுருள்.
ii) நிற மூர்த்தம்.
iii) Histone புரதம்.
iv) இழை மணி.
v) ATP உற்பத்தி.
vi)

| | DNA | RNA |
|---|---|---|
| ★ | Deoxyribose வெல்லம் காணப்படும் | Ribose வெல்லம் காணப்படும். |
| ★ | இரட்டை இழை | தனி இழை |
| ★ | தைமின் உண்டு | Uracil உண்டு |

**வினா 2**

i) Pyruvate.
ii) Ctyosol.
iii) அ) வளி மண்டல ஒட்சிசன்.
ஆ) தாவரம்—எதனல்
விலங்கு—Pyruvate.
iv) இழை மணி
v) ATP.
vi) வெளிவிடப்படும் காபனீரொட்சைட்டின் கனவளவுக்கும் உள்ளெடுக்கப்படும் ஒட்சிசனின் கனவளவுக்கும் இடையிலான விகிதம்.
vii a] காபோவைதரேட் -
★ காற்றுச் சுவாசம் -RQ=1
★ காற்றின் றியசுவாசம்:-தாவரம்-RQ=முடிவிலி.
விலங்கு-RQ=கருத்தற்றது.
b] இலிப்பிட்-RQ=0 7
c] புரதம் -RQ=0 9
d] சேதன அமிலம்-RQ>1
viii) a] தாவரம் அல்லது பங்கஸ் எனில்pyruvate இல் இருந்து எதனால் உருவாகி பின்பு எதனோல் உண்டாகும். இங்கு காபனீரொட்சைட் விடுவிக்கப்படும்.
விலங்கு எனில் pyruvate இல் இருந்து இலத்திரிக்கமிலம் உண்டாகும்.
b) pyruvate ஆனது அசற்றைல் Co-A ஆக மாற்றப்பட்டு இரப்பின் வட்டத்தில் OAA உடன் சேர்ந்து சித்திரிக்கமிலமாக மாற்றப்படும். சித்திரிக்கமிலமானது பல தொடரான தாக்கங்கள் ஊடாகச் சென்று மீண்டும் OAA இனை உண்டாக்கும் அதேவேளை ATP, $NADH_2$ $FADH_2$ என்பனவும் உண்டாக்கப்படும். இங்கு உண்டாகிய $NADH_2$, $FADH_2$ என்பன பின்னர் ஒட்சியேற்ற பொஸ்போரிலேற்றத்திற்கு உட்பட்டு ஒட்சியேற்றப்பட்டு ATP உண்டாக்கப்படும் அதேவேளை வளிமண்டல ஒட்சிசன் தாழ்த்தப்படுவதால் நீரும் உண்டாகும்.

**வினா 3**

i) அ] நெப்பிரோலெப்பிஸ்
ஆ] போகனாற்றம்
இ] மியூக்கர்.
ஈ] அகாரிக்கஸ்.
உ] சைக்கஸ்

ii]

| Spirogyra | mucor |
|---|---|
| சளியம் உண்டு | இல்லை |
| கிளை அற்றது | உண்டு |
| பிரிசுவர் உண்டு | இல்லை |
| பச்சைய உரு மணி உண்டு | இல்லை |
| வித்துருமணி உண்டு | இல்லை |
| தனிக்கரு காணப்படும் | பலகருக்கள் காணப்படும் |

iii) கலச்சுவரில் செலுலோஸ், பெக்ரின் இருத்தல், ஒளித்தொகுப்பு நிறப்பொருட்களாக பச்சையம் a பச்சையம் b, கரட்டின், சாந்தோபில் காணப்படல் சேமிப்புணவாக மாப்பொருள் காணப்படல்.
iv) தடித்த வித்துறை காணப்படல்.
பரம் பலடைய இசைவாக்கங்களைக் கொண்டிருத்தல்.
தகாத காலம் கழிக்கக் கூடியதாக இருத்தல்:
உணவுச் சேமிப்பைக் கொண்டிருத்தல்.

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

## கூரைத்தகடு தவறி வீழ்ந்து தொழிலாளி காயம்

(மந்திகை)

பருத்தித்துறை இறங்கு துறையில் சஜந்தா கப்பலில் இருந்து கூரைத்தகடு இறக்கிக்கொண்டிருந்த வேளை அது தவறி வீழ்ந்ததில் காயமடைந்த ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறு மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த அன்ரன் ஜெயக்குமார் (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார். (உ-23)

## வருடாந்த மஹோற்சவம்

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி மூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர் வரும் யூன்மாதம் 4 ஆம் இரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ)

## உளவியல் சார்ந்த செயற்பாட்டறை அமைப்பு

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மன நோயாளர்களுக்காக 'உளவியல் சார்ந்த செயற்பாட்டறை அமைக்கப் படவுள்ளது.

எம்.எஸ்.எவ் நிறுவன இணைப்பாளருடன்வைத்தியசாலைப் பதில்மாவட்டவைத்திய அதிகாரி என்.ஜே.ஞானசுதன் நடத்திய பேச்சை அடுத்து இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கட்டிட வேலைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளதாக எம். எஸ். எவ்.வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[உ-23]

## இன்று ஒரு தகவல்

# ஏதையும் ஏற்கும் அன்பு

வழக்கம் போல் நபிகள் நாயகம் தன் தோழர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த மூதாட்டி ஒருத்தி சின்ன கூடை ஒன்றை அவரிடம் தந்தாள். ''என் தோட்டத்தில் விளைந்த திராட்சைப் பழங்களைத் தங்களுக்காகக் கொண்டு வந்தேன்'' என்றாள். அதிலிருந்து ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார் நபிகள் நாயகம். பிறகு அந்த மூதாட்டியிடம் சிரித்துப் பேசிக்கொண்டே ஒவ்வொரு பழமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

இதைக் கவனித்த தோழர்கள், உண்ணும் பொருள் அன்பளிப்பாக வந்தாலும் நமக்கு எல்லாம்பகிர்ந் ளித்த பின்னரே நபிகள் உண்ணுவார்; ஆனால் இன்று மட்டும் திராட்சைப் பழங்களைத் தாமே உண்கின்றார். நமக்கு ஒன்றுகூடக்கொடுக்கவில்லை. என்ன காரணமாக இருக்கும்? என்று தங்களுக்குள் மெல்லப் பேசிக் கொண்டார்கள்.

திராட்சைக் கூடையும் காலியாயிற்று. மூதாட்டியும் உள்ள நிறைவுடன் நபிகளிடமிருந்து விடைபெற்றார். நபிகளின் தோழர்களுள் ஒருவர் ஆர்வத்தை அடக்க முடியாமல், ''பெருமானே! இன்று வழக்கத்திற்கு மாறாக எல்லாப் பழங்களையும் தாங்களே உண்டீர்கள். எங்களுக்கு ஒன்றுகூடக் கொடுக்கவில்லையே, அதற்கு என்ன காரணம்?'' என்றுகேட்டார்.

அதற்கு நபிகள் ''அந்த மூதாட்டி அன்புடன் திராட்சைப் பழங்களைக் கொண்டு வந்தாள். அதில் ஒன்றை எடுத்து வாயில் போட்டேன்; கடுமையான புளிப்பு. உங்களிடம் பழத்தைத் தந்திருந்தால்உங்கள் முகம் எப்படியும் பழத்தின் புளிப்பைக் காட்டி இருக்கும். அதனால் அந்த மூதாட்டியின் உள்ளம் வருந்தியிருக்கும். அதனால் தான் சிரித்துக் கொண்டே எல்லாப் பழங்களையும் நானே உண்டு விட்டேன்'' என்று விளக்கம் தந்தார். நபிகள் நாயகத்தின் பெருந்தன்மையை எண்ணி மகிழ்ந்தார்கள் தோழர்கள்.

பேராசிரியர் எ. சோதி

# புலிகள் மீதான தடையை நீக்குவது தமிழீழம் கொடுப்பதற்குச் சமமாகும்!

## சிங்கள ஜாதிகசங்கமய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது, தமிழீழம் கொடுப்பதற்கு சமமானதாகுமென்று சிங்கள ஜாதிக சங்கமயவின் தலைவர் எஸ். எல். குணசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்கினால், அதுதமிழ் ஈழத்தினை அமைக்க உரிமை வழங்குவது போலாகிவிடும், அத்துடன் அவர்களுடன் பேச்சுக்களில் அரசு ஈடுபடுமானால் அதுதமிழ் ஈழத்தின் எல்லைகளை நிர்ணயிக்கும் பேச்சுவாத்தையாகவே இருக்கும்.

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடைஒரு நீர்க் குழாய் போன்றதல்ல வேண்டும்போது திறந்து நீரைஎடுக்கவும், வேண்டாத போது அடைத்து விடவும்என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று குணசேகர மேலும் தெரிவித்தார். (இ)

# புலிகளின் தடையை நீக்குவது பேச்சுக்கு வழி வகுக்கும்

## முன்னாள் ஆலோசகர் கருத்து

(கொழும்பு)

அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க பூரண விருப்பத்துடன் இருக்கின்றதென்பதை வெளிப்படுத்த அரசிற்கு இருக்கும் ஒரே வழி, விடுதலைப்புலிகள் மீதான தடையை தற்காலிகமாகவேனும் நீக்குவதே ஆகும்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சியில், அவரின் சர்வதேச விவகார ஆலோசகராக செயற்பட்ட சர்வன்வீரக்கோன்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முட்டுக்கட்டையாக விடுதலைப்புலிகள் மீதானதடையிருக்குமானால், அரசு அத் தடையை நீக்குவதன் மூலம் சமாதானத்திலும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதிலும் அரசுக்குள்ள விருப்பத்தை வெளிப்படுத்தமுடியும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசாங்கம் யோசிக்கவோ கவலைப்படவோ வேண்டிய அவசியம் இருப்பதாக எனக்கு தெரியவில்லை.

அரசு புலிகளுக்கிடையிலான போர் நிறுத்தம் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை நோர்வேயின் உதவியுடன் ஏற்படுத்தலாம் என்பதால் அரசுசமாதானபேச்சு மற்றும் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்க விடயத்தில் தீவிரமாகச் செயற்படுவது அவசியமென்றும் ஆலோசகர் சர்வன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். (இ)

# சமாதான முயற்சிகளில் வெளித்தலையீடு கிடையாது

## எரிக்சோல்ஹெய்ம்தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நோர்வேயின் சமாதான முயற்சிகளில் வெளியார் தலையீடுகள் எதுவும் இல்லை என தெரிவித்துள்ள நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம்,

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இவ் விடயத்தில் நோர்வேயுடன் நெருக்கமாக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ராஜங்க பிரதி செயலாளர் ரிச்சர்ட் அமிட்டேஜ் உட்பட அமெரிக்க அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக தெரிவித்துள்ள அவர்,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அந் நாட்டில் ஐக்கியம் ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு பாதகம் இன்றி தீர்வொன்று காணப்படுவதையே அமெரிக்கா விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தைப் பொறுத்தவரை அந்நாட்டின் ஐக்கியம் ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு பாதகம் இன்றி தீர்வு காணப்பட வேண்டும் என்ற உடன்பாடு சர்வதேச சமூகத்திடம் காணப்பட்டாலும்,

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் தீர்வொன்று காணவேண்டும் என்ற உடன்பாடு சர்வதேச சமூகத்திடம் இருப்பதையும் ''இந்தியா எப்றேட்'' செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சி கடினமானதாக இருந்தாலும் நம்பிக்கையை இழக்கும் நிலையில் இல்லை.

இலங்கை நிலைவரத்தை பொறுத்தவரை, நோர்வேயின் சமாதான முயற்சிக்கு இந்தியாவின் ஆதரவு முன்னுரிமை பெறுவதாகவும்,

அதற்கு அடுத்த இடத்தில் அமெரிக்கா இருப்பதாகவும் எரிக்சோல் ஹெய் அந்தப் பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சியில் முன்னேற்றம் உள்ளது. ஆனால் வேகம் போதாது.

இரு தரப்பினருக்குமிடையில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கையின் பெறுமதியை இருதரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# அவசர பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசாங்க பொதுச்சேவை கல்வி சாரா ஊழியர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கல்வித் திணைக்கள கல்விசாரா ஊழியர்கள், அலுவலர்கள், பாடசாலைகளைச் சேர்ந்த ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# 375 தபால் பொதிகள் எடுத்து வருகை

[யாழ்ப்பாணம்]

யாழ். வந்து சேர்ந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம் வெளி மாவட்டங்களில் இருந்து 375 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

அத்துடன், இக்கப்பலில் யாழ் குடாநாட்டில் இருந்து 49 தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

இதே வேளை, குடா நாட்டில் 500, 1000 ரூபா பெறுமதியான முத்திரைகள் தவிர ஏனைய முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு இல்லை என பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

# தலைமைத்துவ பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயிநிறுவனங்களின் இணைப்புக் குழுவின் இளைஞர் சபையினர் நடத்தும் சாயி இளைஞர்களுக்கான 'தலைமைத்துவப் பயிற்சி' நாளைக்காலை யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (இ-104)

# தாதியர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் தாதியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில், தமக்கு மாற்றுச் சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.

ஊழியர்களுக்கும், நோயாளர்களுக்கும் சிறந்த உணவு கிடைக்க வசதிசெய்ய வேண்டும் வைத்தியசாலைக் கட்டணங்கள்குறைக்கப்பட வேண்டும், என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். (உ-5)

# பாஷையூர் அபிவிருத்திக்கு 18 இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் கிராமத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தி மற்றும் புனருத்தான வேலைகளை மேற்கொள்வதற்காக 18 லட்சம் ரூபாவினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

அண்மையில் பாஷையூர் கிராமத்தின் பல்வேறுபட்ட பொது அமைப்புகளின பிரதிநிதிகள ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சரைச் சந்தித்து பாஷையூர் கிராம அபிவிருத்தி தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளனர்.

இச சந்திப்பின் போது ஈ.பி.டி.பியின் பிரமுகர் கேதீஸும் கலந்து கொண்டார்.

பாஷையூர் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்த அமைச்சர் பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலய புனரமைப்புக்கு 10 லட்சம ரூபாவும் பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கக் கட்டடம, பாஷையூர் சனசமூக நிலையக் கட்டடம, புனித அந்தோனியார் விளையாட்டு மைதானம மற்றும் அங்குள்ள விளையாட்டு மைதான அறை ஆகியவற்றைமீள புனருத்தாரணம செய்வதற்காக 8 லட்சம் ரூபாவும ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (உ)

# திருட்டைத் தடுக்க வட்டுக்கோட்டையில் விழிப்புக் குழு அமைப்பு

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டைப் பகுதியில் தொடரும் திருட்டுச் சம்பவங்களால் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவுகின்றது.

ஒவ்வொரு நாளும் இப்பகுதியில் இரண்டு மூன்று திருட்டுச் சம்பவங்கள் தொடராக இடம் பெறுகின்றன.

இதனால் இப்பகுதி இளைஞர்களை ஒன்றிணைத்து விழிப்புக் குழுவொன்றை அமைப்பதன் மூலம் திருட்டு சம்பவங்களைத் தடுக்கஅப் பகுதி கிராம சேவகர் முயற்சி மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (உ-59)

# ஜனாதிபதிபுலமைப்பரிசில் தெரிவுக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தரம் 6,7,8 இற்கான விசேட ஜனாதிபதியின் புலமைப்பரிசில் திட்டத்திற்கான நடப்பாண்டில் வலிகாமம் வலயப் பாடசாலைகளில் இருந்துவிண்ணப்பித்த மாணவர்களின் தெரிவிற்கான கலந்துரையாடல்கள் கோட்டரீதியாக பின்வரும் திகதிகளில் நடைபெறும் என வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

29 ஆம் திகதி சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியிலும்,

30ஆம் திகதி சங்கானைக் கோட்ட மாணவர்களுக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியிலும்,யூன் மாதம் முதலாம் திகதிஉடுவில் கோட்டப் பாடசாலைமாணவர்களுக்கு இராமநாதன் கல்லூரியிலும், யூன்மாதம்4ஆம் திகதி தெல்லிப்பழைக் கோட்டமாணவர்களுக்கும் நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

கலந்துரையாடல்கள் யாவும்காலை 9.00 மணி தொடக்கம் நடைபெறும் எனவும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையின் படி அதிபர்களைச் செயற்படுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (உ-2)

# வலிகாமம் மேற்கில் யு.என்.எச்.சி.ஆர் அமைப்பு பலதிட்டங்கள் முன்னெடுப்பு

[யாழ்ப்பாணம்]

வலிகாமம தெற்கு பிரதேச செயலர்பிரிவில் யு. என். எச். சி. ஆர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயற்திட்டங்கள் சில மிக விரைவில் செயற்படுத்தப்படவுள்ளன. அவை வருமாறு;

உடுவில் பெரிய குளப்பகுதியில் சலவைத் தொழிலாளர்களுக்கான இளைப்பாறும் கொட்டகை ஒன்றும் கலாசார மண்டபம் ஒன்றும் சுமார் 3 இலட்சத்து 72 ஆயிரம் ரூபா செலவிலும்,

தாவடி வடக்கு கிராமத்தில் கடித உறை தயாரிப்பதற்கான தொழிற்சாலை சுமார் 4 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா செலவிலும

கந்தரோடைபழைய விளையாட்டு மைதானத்தடியில் உள்ள நலன்புரி நிலையத்திற்கும் சுன்னாகம் முனீஸ்வரர் அடியில் உள்ள நலன்புரி நிலையத்திற்கும் தலா ஒவ்வொரு குழாய்க் கிணறும் சுமார் 60 ஆயிரம் ரூபா செலவிலும்அமைக்கப்படவுள்ளன.

இத் திட்டங்கள் யாவும் மிக விரைவில் செயற்படுத்தப்படவுள்ளதாக வலிகாமம் வலய திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன் தெரிவித்துள்ளார். (உ-2)

# இந்தியாவின்சமாதான அழைப்பிற்கு பாகிஸ்தான் சாதகமான பதில்?

(புதுடில்லி)

சமாதானப் பேச்சு வார்த்தைக்கு வரும்படி இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுக்கு விடுத்த அழைப்பினை பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஸாரப் ஏற்றுக்கொள்வார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பேச்சு நடாத்த இந்தியா விடுத்த அழைப்பினை முஸாரப் ஏற்றுக் கொண்டு மேற்படி பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள புதுடில்லி செல்வார் என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் சத்தார் உறுதி செய்துள்ளார்.

நீண்ட நாளாக இழுபறியில் இருக்கும் காஷ்மீர் விவகாரத்தை சுமுகமாகத்தீர்க்க மேற்படி பேச்சுவார்த்தை வாய்ப்பளிக்கக் கூடுமென்று சத்தார் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அதி உயர் மட்டப் பேச்சுக்கள் கடைசியாக இரண்டுஆண்டுகளுக்குமுன்னா இஸ்லாமாபாத்தில் நடைபெற்றதுஎன்பதும்,

இப்பேச்சு வார்த்தையில் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப்பும் இந்தியப் பிரதமர் வஜ்பாயும் சந்தித்துப் பேசியதும் தெரிந்ததே. (உ-9)

# இந்தோனேஷியஅரசியல் இழுபறி தீர்ப்பதில் அமைச்சுக்குழு முனைப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அமைச்சரவைக் குழு அந்நாட்டு அதிபரையும உப அதிபரையும் இன்று சந்தித்துப் பேசவுள்ளது

ஏழுபேர் கொண்ட அமைச்சரவைக்குழு தனித்தனியே இருவரையும் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

இந்தோனேஷிய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட் தான் குற்றமற்றவனென்றும் பதவியிலிருந்து விலகமாட்டேன் என்றும் தனக்கு பலம் இருக்கிறது என்றும் வாதிடுகிறார்.

ஆனால் உப அதிபர் மேகவதி சுகர்னோ புததிரியும் அவரின் ஆதரவாளர்களும் வாஹிட் பதவி விலக வேண்டும் என்றும் மக்களைத் தூண்டி வருகின்றனர்.

இரு தலைவர்களுக்கிடையேயான இந்த இழுபறி நிலையை போக்கும் முகமாக அமைச்சரவைக்குழு சமரசத் திட்டத்தை முன்வைக்க இருக்கிறது.

அநேகமாக அதிகாரங்களை இருவரும் பகிர்ந்து ஆட்சியை நடத்த வேண்டுமென்பதே சமரசத்திட்டத்தின் நோக்கமாக இருக்குமென்று நோக்கர்கள் கருதுகிறார்கள். (து)

## உலக தரிசனம்

# அமெரிக்க சீனத்தகராறு சமரசத்தில் முடிந்தது

[பீஜிங்]

சீனத்தீவு ஒன்றில் தரையிறக்கப்பட்டிருக்கும் அமெரிக்க விமானத்தை விடுவிப்பதற்கு சீனா இணங்கியுள்ளது.

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து சீனா விமானத்தை அனுப்ப உடன்பட்டுள்ளதாகவும இதேவேளை விமானத்தைப் பகுதிபகுதியாகபெட்டிகளில் அடைத்து அனுப்புவதற்கு சீனா இணங்கியுள்ளதாக தெரிய வருகிறது.

[து]

# புஷ்ஷினதுகட்சியிலிருந்து விலகிச் சென்ற செனட்டர்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின குடியரசுக் கட்சியில் இடம்பெற்றிருந்த செனட் உறுப்பினர் ஒருவர் குடியரசுக் கட்சியை விட்டு விலகி சுயேட்சையாக இயங்க ஆரம்பித்துள்ளார்.

கட்சி விலகிய செனட்டரான ஜெபஸ் யேபோட் இது தொடர்பாகக் கருத்துத் ... கட்சியில் உள்ளவர்கள் புதிய மாற்றங்களுக்கு இடமளிக்க மாட்டார்கள். எனவே அக்கட்சியில் தொடர்ந்து நீடிக்க நான் விரும்பவில்லை என்றார். செனட்டரின் மேற்படி முடிவு புஷ்ஷின் திட்டங்களைச் செயற்படுத்துவதில் தடங்கலை விளைவிக்கக் கூடுமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

[உ-9]

# குறைந்த வயதிலே எவரஸ்ற்ஏறிய மாணவன்

(காட்மண்டு)

உலகின் உயரமான எவரெஸ்ட் மலைச் சிகரத்தில்ஏறியவர்களில் மிகவும் வயது குறைந்தவர் என்ற சாதனையை 16வயதுடையநேபாளப் பள்ளி மாணவர் ஒருவர் படைத்துள்ளார்.

இரண்டாவது மலை ஏறும் முயற்சியின் போதே ஷிம்பா ரேல் என்ற இந்த மாணவன் 16 ஆவது வயதைஎட்டினான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதன் முறை மலை ஏறும் போது கடும்பனி காரணமாக 3 விரலையும் இழந்து விட்டு. மலை உச்சிக்கு ஆக22 மீற்றர்களேஇருக்கும்நிலையில்அவன் திரும்பிவர வேண்டி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# அழகுராணியை மணம்புரியும் ஆர்ஜன்டீனா ஜனாதிபதி

[புவனஸ்அயர்ஸ்]

மிகப் பெரும்பணக்காரரும் முன்னாள் ஆர்ஜன்டீனா ஜனாதிபதியுமானகார்லோஸ் மெனெம் அழகு ராணி சிசிலியா பொடேகோவை திருமணம் செய்ய உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

70வயதான முன்னாள் ஜனாதிபதிக்கும் 35 வயதான சிலி அழகு ராணிக்கும் இடையில் காதல் மலர்ந்திருப்பதாக கடந்த சில மாதங்களாக செய்திகள் வெளியாகியது தெரிந்ததே.

இவர்கள் இருவரும் தற்போது திருமணம் செய்ய உள்ளனர். மேற்படி, முன்னாள் ஜனாதிபதிதனிப்பட்ட ஜெட் விமானங்கள், அதிவேகக் கார்கள் மற்றும் ஆடம்பர மாளிகைகளுக்கும்சொந்தக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-9]

# காலமானார்

பிடல் கஸ்ரோமற்றும்பாப்பரசர்ஆகியவர்களின்வாழ்க்கைச்சரிதத்தை எழுதியவரும் 1961 ஆம் ஆண்டு நிகழ்ந்த பிக்ஸ்குடா படையெடுப்பை முதலில் வெளியிட்ட வருமான நியூயோர்க் பிரபல பத்திரிகையாளர் டேட்ஸூலக் தனது 74 ஆவது வயதில் மரணமடைந்தார். [உ-9]

# ஜோர்ஜ்புஷ் சந்திப்பார்

[வாஷிங்டன்]

திபெத்திய ஆத்மீகத் தலைவரான தலாய்லாமாவுடன் அமெரிக்க ஜனாதிபதி புஷ் மற்றும் வெளிநாட்டமைச்சர் பவல் ஆகியோர் விரைவில் சந்திப் பொன்றை நிகழ்த்த உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

## விசாரணைகளுக்கு...

[3ஆம் பக்கத்தொடாச்சி]

★ கந்தன் நிமலதரன் (பி-46)

முறைப்பாடு : கோவிந்தன் கந்தன், காரணவாய் நெல்லியடி;

★ ஆனந்தன் திவினன் (பி-47)

முறைப்பாடு ; கதிரமலை செல்வராணி, நீர்வேலி கிழக்கு.

★ சுடபிரமணியம் சுதாதரன் (பி-18)

முறைப்பாடு : கமல தேவி சுபபிரயணியம், கொக்குவில் யாழ்ப்பாணம;

சாட்சி ;ராஜா கனகாம்பிகை அரியாலை.

★ கனகரத்தினம் நாகேஸ்வரன், (ஏ-3பி)

முறைப்பாடு; கனகரத்தினம் சிவபாதன், மீசாலை வடக்கு

சாட்சிகள : சிறிஸ்கந்தராசா ஆர். எம். ஜெனகன்ராஜா ஆர். எம். விஸ்வராஜாநாகதாஸ் ஏ. கே. நாகராசா;

★ சின்னத்தம்பி ஜெயபாலன் (ஏ-3)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மே மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது.

| | |
|---|---|
| 190722 பி | 191787 ஏ |
| 191787 பி | 191848 ஏ |
| 181848 பி | 181848 சி |

### தெல்லிப்பளை

| | |
|---|---|
| 181445 ஏ | 181568 ஏ |
| 187173 ஏ | 187173 பி |
| 187173 சி | 187218 ஏ |
| 187218 பி | 187218 சி |
| 187219 ஏ | 188606 ஏ |
| 188684 ஏ | 188709 ஏ |
| 189563 ஏ | 189581 ஏ |
| 190487 ஏ | 190487 பி |
| 190535 ஏ | 190593 ஏ |
| 190593 பி | 190717 ஏ |
| 191870 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 179417 ஏ | 180339 ஏ |
| 180339 பி | 180349 ஏ |
| 180353 ஏ | 184839 ஏ |

| | |
|---|---|
| 188608 டி | 188738 ஏ |
| 188739 ஏ | 188739 பி |
| 188739 சி | 189489 ஏ |
| 189541 ஏ | 190459 ஏ |
| 190459 பி | 190486 ஏ |
| 190486 பி | 190631 ஏ |
| 190631 பி | 190654 ஏ |
| 190656 ஏ | 190693 ஏ |
| 190693 பி | 190700 ஏ |
| 190760 ஏ | 190769 ஏ |
| 190769 பி | |

### யாழ்ப்பாணம்

191884 ஏ

### நல்லூர்

| | |
|---|---|
| 190460 ஏ | 190488 ஏ |
| 190540 ஏ | 190689 ஏ |
| 190714 ஏ | 190714 பி |
| 191784 ஏ | 192003 ஏ |
| 192045 ஏ | 192275 ஏ |
| 192342 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 184954 ஏ | 184951 பி |
| 184954 சி | 184954 டி |
| 185262 ஏ | 186815 ஏ |
| 186815 பி | 187202 ஏ |
| 187202 பி | 187223 ஏ |

கட்சி விலகிய செனட்டரான ஜேபஸ் யேயோட் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், குடியரசுக் தடங்கலை விளைவிக்கக் கூடுமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

[உ-9]

# பாதுகாப்புப் பயிற்சியில் சிங்கப்பூர் விமானப்படை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் விமானப்படையினர் ஒருநாள் தற்காப்புப் பயிற்சியில ஈடுபடவுள்ளனர்.

ஆயிரம் பேர் அடங்கிய விமானப்படையினர் இப்பயிற்சியில் ஈடுபட இருக்கின்றனர்.

சிங்கப்பூரின் ஒதுக்குப்புறமான பகுதியில் இப்பயிற்சி இடம்பெற இருப்பதாகவும் பயிற்சியின் போது அப்பிரதேச மக்கள் பீதி கொள்ளத் தேவையில்லை யென்றும் விமானத் துறை அறிவித்துள்ளது.

விமான விபத்துக்களிலிருந்து தப்பிக்கொள்வது தொடர்பான பயிற்சி நிகழ்வுகளே இடம்பெறும் என்று தெரியவருகிறது. (து)

# ஆப்கானிஸ்தானில் வாழும் முஸ்லிம் அல்லாதோரை மஞ்சள் பட்டி அணியபணிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலிபான் அமைப்பினர் முஸ்லிம் தவிர்ந்த ஏனையோர் மஞ்சள் பட்டி அணிய வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை நேபாள அரசு கண்டித்துள்ளது

தலிபான்களின் இந்த அறிவிப்பு உலகின் மனித உரிமைகளை மீறும் ஓர் செயல் என்று உலகின் ஒரேஒரு இந்து இராச்சியமான நேபாள அரசின் வெளிவிவகார அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமயக் கொள்கைகள் திணிக்கப்படுவதிலிருந்து முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கும் வகையிலேயே இந்துக்களையும் வேறு சிறுபான்மை இனத்தவரையும் மஞ்சள் பட்டி அணியுமாறு தலிபான் கேட்டுக்கொண்டுள்ளது. (உ-7)

ஆர். எம். விஸ்வராஜா நாகதாஸ் ஏ. கே. நாகராசா;

★ சின்னத்தம்பி ஜெயபாலன் (ஏ-3)

முறைப்பாடு : அம்பலன் சின்னப்பிள்ளை, ஆவரங்கால் புத்தூர்.

சாட்சி ; ஜெயபாலன்

★ இராமலிங்கம் விக்னராசா இராமலிங்கம் சிறிஸ்கந்தராசா (ஏ-பிசி-டி)

முறைப்பாடு : இராமலிங்கம் அன்னம்மா, மீசாலை வடக்கு

சாட்சிகள் ; பிருந்தா (மனைவி) விஸ்வராசா

★ கந்தையா சிறிதரன் (பி-73)

முறைப்பாடு :சின்னத்துரை கந்தையா பொன்னம்மா, மிருசுவில் சாவகச்சேரி

சாட்சி : துரை

★ மைக்கல்பேனாட்யோண்சன் (ஏ-16)

முறைப்பாடு : யோன்சன் பாரதி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்.

★ யோசப் கனிஸ்வரன் [பி-24]

முறைப்பாடு : யோசப் அந்தோனிப்பிள்ளை 93/3, டேவிற் வீதி யாழ்ப்பாணம்.

சாட்சி : அலன் றோஸ்

★ கந்தசாமி புஸ்பலதா [பி-14]

முறைப்பாடு : கதிரன் செல்லாச்சி, மந்துவில் மேற்கு கொடிகாமம்.

சாட்சி ; கதிரன் கந்தசாமி

[உ-10-2]

## உடுவில்

| | |
|---|---|
| 179417 ஏ | 180339 ஏ |
| 180339 பி | 180349 ஏ |
| 180353 ஏ | 184839 ஏ |
| 184839 பி | 184839 சி |
| 184989 ஏ | 184883 பி |
| 186887 ஏ | 187083 ஏ |
| 187083 பி | 187203 ஏ |
| 187203 பி | 188620 ஏ |
| 188620 பி | 1886897ஏ |
| 188759 ஏ | 188759 பி |
| 188784 ஏ | 188784 பி |
| 188784 சி | 188784 டி |
| 189304 ஏ | 189314 ஏ |
| 189314 பி | 189462 ஏ |
| 189490 ஏ | 18949 பி |
| 189490 சி | 189499 ஏ |
| 189499 பி | 189597 ஏ |
| 190532 ஏ | 190532 பி |
| 190544 ஏ | 190544 பி |
| 190606 ஏ | 190607 ஏ |
| 190703 ஏ | 190703 பி |
| 190704 ஏ | 191775 ஏ |
| 191775 பி | 191795 ஏ |
| 191795 பி | 191819 ஏ |
| 191819 பி | 191851 ஏ |

மே மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது.

## சங்கானை

| | |
|---|---|
| 178091 ஏ | 182874 ஏ |
| 185189 ஏ | 188608 ஏ |
| 188608 பி | 188608 சி |

| | |
|---|---|
| 184954 சி | 184954 டி |
| 185262 ஏ | 186815 ஏ |
| 186815 பி | 187202 ஏ |
| 187202 பி | 187223 ஏ |
| 187223 பி | 190566 ஏ |
| 190566 பி | 190566 சி |
| 190609 ஏ | 190609 பி |
| 191778 ஏ | 191778 பி |
| 191789 ஏ | 191883 ஏ |
| 191971 ஏ | 191977 ஏ |
| 191977 பி | 192018 ஏ |
| 192018 பி | 192018 சி |
| 192018 டி | |

## தெல்லிப்பழை

| | |
|---|---|
| 101841 ஏ | 186820 ஏ |
| 189393 ஏ | 189393 பி |
| 190649 ஏ | 190707 ஏ |
| 191776 ஏ | 191811 ஏ |
| 191811 பி | 191811 சி |
| 191811 டி | 191865 ஏ |
| 191865 பி | 191877 ஏ |

## உடுவில்

| | |
|---|---|
| 174891 ஏ | 174891 பி |
| 174891 சி | 185112 ஏ |
| 185112 பி | 185112 சி |
| 189372 ஏ | 189512 ஏ |
| 189523 ஏ | 189524 ஏ |
| 190499 ஏ | 190646 ஏ |
| 191786 ஏ | 191786 பி |
| 191878 ஏ | 191894 ஏ |
| 191894 பி | 192013 ஏ |
| 192022 ஏ | 192022 பி |
| 192023 ஏ | 192023 பி |
| 192038 ஏ | 192038 பி |
| 192038 சி | 192038 டி |
| 192038 ஈ | 192047 ஏ |
| 192874 பி | 920470 பி |

பின் வரக்கூடியதை முன்
அறியக் கூடியவரே
அறிவுடையவராவார்.

குறள்

வலம்புரி

## பணிப்பாளரின் இராஜினாமா!

**யாழ்ப்பாணம்** போதனா வைத்தியசாலை நிர்வாகம் மிகவும் பரந்துபட்டது. பல தரப்பட்டவர்களையும், சமாளித்து பிரச்சினைகளை முகாமை செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு அங்கு இருப்பது மறுக்க முடியாத உண்மை அதனிலும், அன்றாடம் தேவையான மருந்துகளை அனுப்பி வைப்பதில் அரசாங்கம் காட்டும் அசமந்தம் - வைத்தியர்களின் பற்றாக்குறை - இடவசதி இன்மை என பல்வேறு பிரச்சினைகள்மத்தியிலும் யாழ் போதனா வைத்தியசாலை இயங்குகிறதெனில் பணிப்பாளர் மற்றும் டாக்டர்கள் உத்தியோகத்தர்களின்தன்னலமற்ற சேவையும் காரணமாகும்.

இந்நிலையில் வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் தனது பணிப்பாளர் பதவியை இம்மாதம் 31ந் திகதியுடன் முடிவுக்குக் கொண்டு வரும் இராஜினாமா கடிதத்தை பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

நிர்வாகத் திறனும், அனுபவமும் மிக்க பணிப்பாளர் ஒருவர் பதவியிலிருந்துஇராஜினாமாச்செய்வது, விருப்புக்குரியதல்ல. அதேநேரம் டாக்டர் நவமலர் கனகரட்ணம் அவர்கள் 95ம் ஆண்டின்இடப்பெயர்வின் போது யாழ் போதனாவைத்தியசாலையின் சேவையை மக்களுக்கு வழங்குவதற்காகப் பாடுபட்டவர், சேவையாற்றியவர் என்பதை எளிதில் மறந்து விடவும் முடியாது.

இந்நிலையில் ஏற்பட்

### திறனாய்வுக்களம்

# இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்திட்ட "நீதியின் இருக்கைகள்" நாடகம்

**எம். எஸ். எஸ். கீத்தி**

திருமறைக் கலாமன்றத்தின் தமிழ்விழா 2001 எட்டாம் நாள் நிகழ்வு யாழ்ப்பாணபல்கலைக்கழககைலாசபதி கலை அரங்கில் நடைபெற்ற போது 'நீதியின் இருக்கை' கான பிளாஸ்ரிக் இருக்கைகளில் ஆர அமர்ந்திருக்கிறது. ஒரு கூட்டம். கன்னித் தமிழ்வேர்களுக்குள் முத்தெடுத்து காலந்தோறும் இம்மண்ணில் முத்தத்தைப் பதிப்போம். என்று சபதம் எடுத்தவர்கள் என்றும் குன்றா இளமையுடன் குதூகலித்திருக்கும் தமிழ் ஆரணங்குக்கு விழா எடுத்து சத்திய வேள்வியில் சரித்திரம் படைக்கும் தமிழ் இனத்தின் அடங்காத் துயரங்களை அரங்கினில் நிகழ்த்தினர்.

நீதியே வெல்லும்: சத்யமே ஜெயம் என்ற மொழிகள் அன்று பொருந்தின. இன்றோ நீதி சிதையில் எரியும் நிலையும் அரக்கத்தனமும் அராஜகமும் ஆட்சி நடத்தும் நிலையுமே இம் மண்ணில் தொடர்கின்றன.

**செத்துப் போன நீதி**

ஆம், சாம் பிரதீபனின் 'நீதியின் இருக்கைகள்' நாடகம் சிலப்பதிகார நீதி கேட்கும் படலத்தையும் இன்றைய நீதி தவறிய தேசத்தின் நிலையையும் சமகால வாழ்வியல் யதார்த்தங்களையும் ஒரே அரங்கில் இணைத்து. நிரபராதியான குடிமகன் (மாதவன்) ஒருவனின் அநியாய அழிப்பால் ஏங்கித் தவிக்கும் அபலை ஒருத்தியின் அவல வாழ்வையும், செத்துப் போன நீதியால் ஆர்ப்பரிக்கும் அவரின் அடங்காத உணர்வையும் வெளிப்படுத்தி நின்றது.

இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்துப் பேசிய 'நீதியின் இருக்கைகள்' பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனும் இன்றைய கொடுங்கோல் ஆட்சியாளனாகச் சித்தரிக்கப்பட்ட இளஞ்செழியனும் தத்தம் நாட்டுக் கொடிகளை ஏற்றுவதுடன் ஆரம்பமாகின்றது. இளஞ்செழியன் ஏற்றும் கொடியில், மண்டையோட்டுக் குறிகளும், கோரத்தனங்களும் குறியீடாகக் காட்டப்படுகின்றன. அவர்களின் சிம்மாசனங்களுக்கருகில் சாகசங்களை? பறைசாற்றும் கோவலனின் தலை, வெட்டு வாள், குருதி தோய்ந்த மேற்சட்டை, அடையாள அட்டை, மண்டையோடு, துப்பாக்கி என்பன வைக்கப்பட்டிருந்தன. மன்னர்கள் தம்மை அறிமுகம் செய்த பின் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில் மாதவியின் வருகையை முரசறைவோர் அறிவிக்க 'மான் ஆட மயில் ஆட, தேனருந்தும் வண்டினங்கள் தான் ஆட, இடைஆட கொடி ஆட, மயக்கந்தரும் விழி மடல்கள் தான் ஆட'' என்ற பாடலோடு நடனப் புயல் மாதவி அரங்கிலே ஆடுகிறாள். பின்னணி நடன மாதுகளும் இவளின் ஆட்டத்திற்கு ஈடுகொடுத்து ஆடுகிறார்கள். நட்டுவாங்கம் மிக நேர்த்தியாகப் படைக்கப்பட்ட இந்த அசைவுகள் பார்வையாளர் உள்ளத்தில் ஒரு இனம் புரியா மகிழ்வை உண்டு பண்ணின என்பதை இங்கு குறிப்பிடாது விட முடியாது. அவர்களின் உதடுகளும் அப்பாடல் வரிகளை இடைக்கிடை முணுமுணுத்துக் கொண்டன.

மாதவி பச்சை மாலையைப் பரிசாகப் பெறுவதும் ''மாலை வாங்கலையோ வணிகரே மாலை வாங்கலையோ'' என்ற பாடலுடன் மாலை விற்பவர்கள் அரங்கினில் தோன்றுவதும் கோவலன் பச்சை மாலையுடன் மாதவியின் உள்ளத்தையும் வாங்கிச் செல்லும் காட்சிகளும் நீண்டு செல்கின்றன.

**தென்னிந்தியதிரைப்படப்பாணி**

இன்றைய நாடகங்களில் தென்னிந்திய திரைப்படங்களின் தாக்கம் மிகவும் செல்லாக்குச் செலுத்துவதைக் காண முடிகின்றது: அதில் தவறு இல்லை. இந்நாடகத்திலும் கோவலன் - மாதவி ஊடல் காட்சியும் பின்னணி நடன அமைப்பும் 'அடிமைப்பெண்' திரைப்படத்தில் வரும் அரங்கியல் காட்சி நுட்பத்தை அப்படியே பிரதி பண்ணியதோ, எனஎண்ணத் தோன்றுகிறது. இங்கு பத்பொருள்கள் நாசூக்காகப்

லன் மாதவியை விட்டுப் பிரிந்து போகும் நிலையை 'ஊழ்வினை' என்று குறிப்பிட்டு ஆடல் மாந்த மூலம் பல செய்திகளை அவையோர்க்கு விதைக்கின்ற தன்மையும் இங்கு நோக்கற்பாலது; பாராட்டப்பட வேண்டியதொன்றே. இந்த அரங்கியல் உத்திமூலம் ஆற்றுகையின் தரம் மிக மிக உயர்ந்தே செல்கிறது.

தமிழ் மண்ணின் அவலங்கள் மாதவன், பொன்மணி பாத்திரங்களுக்கூடாக சிறப்பாகச் சித்தரிக்கப்படுகின்றன. மனைவியின் நகைகளை விற்று சீவியம் நடத்தலாம் என்ற துணிவுடன் நகர் வரும் மாதவன் கைது செய்யப்படுகிறான். அவன் கண்கள் கட்டப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு உயிர் அணு அணுவாகப் பிரிக்கப்பட்டு புதைகுழியில் புதைக்கப்படுகிறான். இந்நிலையில் நீதி கேட்டுப் புறப்படும் பொன்மணியினதும், சிலம்பு விற்கச் சென்ற கோவலன் கொலையுண்ட செய்தியறிந்து அவன் நிரபராதி என்பதை நிரூபிக்க பாண்டிய மன்னன் அவை செல்லும் கண்ணகியினதும் மனநிலைகள் ஒன்றாகவே காட்டப்படுகின்றன.

**இன்று ஒரு கண்ணகி இல்லை**

கண்ணகி தன் பக்க நியாயத்தை நிரூபித்து அரசசபையை ஆட்டம் காணச் செய்கிறாள். பாண்டியமன்னன் வீழ்ந்து உயிர் துறக்கிறான். நீதி வெல்கிறது ஆனால் இன்றைய பொன்மணியோ புனையப்படும் குற்றச் சாட்டுகளை மறுக்கத்திராணி அற்றவளாக மானபங்கப்பட்டு நிலத்திலே சாய்ந்தாள். பொன்மணி சோர்ந்து வீழும் போது ''எனக்கு நீதி இல்லையா என்னால் நிரூபிக்க முடியவில்லையே இங்கு அநீதியின் மேல் கூடு கட்டப்பட்டு முட்டையிடப்படுகிறதே. எங்கள் நீதிகளை மீட்டுத் தருவார் யார் இங்கே விசாரணை இன்றி வேகும் கோவலன்கள் எத்தனை அத்தனை பேருக்கும் ஒரு கண்ணகி இல்லையே''

**வரலாற்றின் மூலம் இன்றைய நிலைமை**

அவளுக்கு நீதி கிடைக்கவில்லை. ஆதிக்க வெறிக்குள்ளும் அரக்க ஆட்சியாளரும் நீதி தவறும் நேர்மையற்ற அரசியலுக்குளும் அது அமிழ்ந்து அமிழ்ந்து போகிறது உண்மைதான் ஆனால் சிலப்பதிகாரத்திலே கண்ணகியைக் கற்புக்கரசியாகப் பார்க்கிறார்கள் இங்கு கற்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் பேசப்படவில்லை. அதனால் பொன்மணி என்ற பாத்திரம் 'இங்கு ஒரு கண்ணகி இல்லையே' என்று ஏங்குவது ஒரு சிறு முரண்பாட்டையே தோற்றுவிக்கிறது. என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும் அங்கு கோவலன் நெறி தவறியவனாகக் காட்டப்படுகின்றான் அதற்குக் கிடைத்த தண்டனையாக அவனின் கொலைச் சம்பவத்தைக் கருதுபவருமுளர் இவ்விடத்திலும் மாதவியின் பாத்திரம் அந்த ரீதியில் நோக்குகின்ற பொழுது முரண்பாட்டையே தருகின்றது எனினும் அன்றைய கோவலன்- கண்ணகியையும் இன்றைய மாதவன்- பொன்மணியையும் தொடர்பு படுத்தும் ஆசிரியரின் திறனைப் பாராட்டலாம்.

ஒளி அமைப்பு, நடனம், பாத்திர உடை, ஒப்பனை, பாவங்கள் குறிப்பிடக் கூடிய ஒன்றாக இருந்தன பின்னணிக் குரல்களும் அதற்கேற்ற விதமாக அமைக்கப்பட்ட இசையும் சிறப்பாக அமைந்தன நீதியின் இருக்கையில் நரபலி வாடைகள், அழுகுரல் அடங்கிய இறுதி இரவுகள் பன்னீர் தெளிக்கும் குருதிக் கறைகள், கோரக் கழுகின் கூரிய நகங்கள் இப்படியான வரிகள் அசறீரீ வாக்குப் போன்று மேடையில் ஒலித்தமை ஆற்றுகையை மேலும் மெருகூட்டியது. வீறு கொள்ள வைத்தது.

மொத்தத்தில் நீதியின் இருக்கைகள் நீதி தவறிய எம் தேசத்தின் நிலைமையை வரலாற்றுக் கதையொன்றின் வாயிலாக அரங்கினுள் புகுத்திய ஓர் ஆற்றுகை முயற்சி எனலாம்.

* * *

இந்நிலையில் ஏற்பட்டுள்ள கருத்து பேதங்கள் பேசித் தீர்க்கப்படவேண்டும். டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவும் இவ்வேளையில் எல்லோரும் ஒன்றிணைந்து யாழ் போதனாவைத்தியசாலையின் குறைகளை நிவர்த்தி செய்யப்பாடுபடுவது அவசியம் என்பதுடன்,

பணிப்பாளரும் தனது இராஜினாமாப் பற்றிமீள் பரிசீலனை செய்வது அவசியமாகும்.

அதேநேரம் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை தீர்த்து வைப்பதுடன், மருந்துத் தட்டுப்பாடு, ஊழியர் தட்டுப்பாடு போன்றவற்றிற்கு தமிழ் எம்பிக்கள் கூட்டாகக் குரல் கொடுத்து வைத்திய சேவை தங்கு தடையின்றி கிடைக்க வழி செய்வதும் அவசியமாகும்.

---

படுகின்றன். அவர்களின் சிம மாசனங்களுக்கருகில் முறையே அவர்களின் வீர தோன்றுகிறது. இங்கு பத பொருள்கள் நாசூக்காகப் பேசப்படுகின்றன. கோவ அத்தனை பெருக்கும் ஒரு கண்ணகி இல்லையே'' என்று கதறுகிறாள்.

... புதுத்திய ஓர் ஆற்றுகை முயற்சி எனலாம்.

★ ★ ★

# வடமராட்சியில் மீன் பிடிக்க அனுமதி மறுப்பு கண்டித்து உண்ணாவிரதம் முன்னெடுப்பு

(மந்திகை)

மீன்பிடித் தொழில் புரிய அனுமதி மறுக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து இன்று காலை 8 மணியளவில் வல்வெட்டித்துறை அம்மன் கோவிலில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த 18 ஆம் திகதியில் இருந்து கற்பிட்டி தொடக்கம் தொண்டைமானாறு வரையான கடற் பகுதிகளில் மீன் பிடிப்பதற்கான அனுமதியை படைத்தரப்பினர் மறுத்ததைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கம் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

சாதகமான பதில் கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ் உண்ணவிரதப் போராட்டத்துக்கு வடமராட்சி வடக்கு கடற்றொழில் சம்மேளனம் பூரண ஆதரவை வழங்குவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-23 43,52 77)

## வைத்தியசாலையில் அபிவிருத்தித் திட்டங்கள்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ளக் கொழும்பிலிருந்து குழு ஒன்று வரவுள்ளது.

அதேவேளை, வைத்திய சாலைவடிகால் அமைப்புக்களைப் புனரமைப்புச் செய்வதற்கான திட்டங்களை மேற்கொள்வதற்காகச் சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகள் வைத்தியசாலையைப் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-23)

## பட்ட மரத்தில் ஏறியவர் வீழ்ந்து படுகாயம்

(மந்திகை)

பட்ட தென்னை மரத்தில் ஏறியவேளை, அதன் அடிப் பாகம் முறிந்து வீழ்ந்து படுகாயமடைந்த ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் வராத்துப்பளையைச் சேர்ந்த தம்பிராசா மனோகரன் (வயது 37) என்பவரே இவ்வாறு வீழ்ந்து காயமடைந்தவராவார்.

(உ-23)

# புலிகள்மீதானதடையைநீக்கக்கோரி மட்டக்களப்பில் எழுச்சிப் பேரணி

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தியது

(மட்டக்களப்பு)

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்கி நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் அவர்களுடன் விரைவாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பகிரங்க வேண்டுகோளொன்றை அரசுக்கு விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மட்டக்களப்பு கிளை நேற்று அங்கு மாபெரும் எழுச்சி மாநாட்டையும் அமைதிப் பேரணி ஒன்றையும நடத்தியுள்ளது.

அம்மாநாட்டிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் அது தொடர்பான தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எழுச்சி மகாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் நேற்றுக் காலை 9-00 மணிக்கு மட்டக்களப்பு புனித சிசிலியார் மகளிர் மகாவித்தியாலய முன்றலில் இருந்து இனிய இசையை எழுப்பியவாறு அமைதிப் பேரணி ஆரம்பமாகியது இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்ட இப்பேரணியில் பெண் ஆசிரியர்களே அதிகமாகக் கூடியிருந்தனர்.

எழுச்சி மாநாடு மட்டக்களப்பு கிளைத் தலைவர் எஸ். தர்மராஜன் தலைமையில் மட்டக்களப்பு அரசடி வேதநாயகம் கூட்டுறவுக் கலையரங்கில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது.

★ தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தல்.

★ இணைந்த வடக்குக் கிழக்கில் உரிமையுடன் கூடிய சமஷ்டி அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்.

★ இந்தியா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குதல். (இ)

# பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாதீர்மானம் ஐ.தே.கட்சிஎம்-பி ஆதரவு

(கொழும்பு)

உயர்நீதிமன்ற பிரதமநீதியரசருக்கு எதிராகஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவுதெரிவித்து பிரேரணையில் கையொப்பமிடுவது என்று நேற்றுநடைபெற்ற கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இப் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் 78 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இவர்கள் அனைவரும் நேற்றைய தினமே பிரதமநீதியரசருக்கு எதிரானநம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிட்டனர்.

இதேவேளை நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளாதபத்து உறுப்பினர்கள்இப் பிரேரணையில் கையொப்பமிடவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நம்பிக்கையில்லாப்பிரேரணையை எதிர்வரும் திங்கட்கிழமை சபாநாயகர் அனுரா பண்டார நாயக்காவைச் சந்தித்து கையளிக்கவுள்ளனர். (இ)

# தெரிவுக் குழுவை அமைத்தே தீருவோம்

## அமைச்சர் எக்கநாயக்கா

உள்ளூர் ஆட்சி சபையை திருத்த சட்டமூலத்திற்கான தெரிவுக்குழுவை அரசாங்கம் அமைத்தே திரும் என்றும் உள்ளூர் ஆட்சித் தேர்தல்களுக்கான சீர்திருத்தங்களை மேற்கொளவோ மென்று உள்ளூர் ஆட்சி மாகாண சபைகள் அமைச்சர் நந்தமித்ர எக்கநயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது உள்ளூராட்சிச் சபைகள் திருத்த சட்ட மூலத்திற்கான தெரிவுக் குழுவை அமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் முன்னர்இதற்கு ஆதரவுவழங்கியிருந்த போது அதற்குத் தனது எதிர்ப்பை தெரிவித்தமைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார். [வ]

### ஜே, வி. பியினர்--

அஞ்ஜன் உம்மா ஆகியோர் தலைமை தாங்கி நடத்தியுள்ளனர்.

இனமத அடிப்படையில் அதிகாரம் பகிரப்படுவதை தமது கட்சி எதிர்க்குமென்று ஆர்ப்பாட்டத்தின் போது ஜே. வி. பி. யினர் கோஷமிட்டனர். (இ)

### 380

யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளரும் ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத்தலைவருமான ந; மதனராஜா வழங்கினார். (இ)

### பிரதமர்....

களான டி.எம்.ஜயரத்தினா அமரசிறி தொடாங்கொட மஹிந்தராஜபக்ஷ, ரிச்சட் பத்திரான ஆகியோர் புலிகளின்தடையை தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ தீர்ப்பதற்கு கடுமையான எதிர்ப்பைத்தெரிவித்தனர்.

சிரேஷ்ட அமைச்சர்களின் இந்தஎதிர்ப்பினை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா அமைச்சர்கள் கதிர்காமர் ஜீ எல்பிரிஸ் ஆகியோருடன் தனிமையில் ஆலோசனை நடத்தியுள்ளார் இந்நிலையில் விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம் தொடர்பாக அரசாங்கத்தின் அறிவித்தல்ஒன்று இன்னமும் இரண்டு வாரமளவில் வெளிவருமென ஜனாதிபதி மாளிகைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தம்மீதான தடையைநீக்குமாறு விடுதலைப்புலிகள் கோரியதை அடுத்து விடுதலைப்புலிகள் அமைப்புடன் அரசுபேசுவதாக இருந்தால் அவர்கள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு பேச்சுவாத்தைக்கு வரவேண்டும் என்று அரசு புலிகளிடம் கோரிக்கை விடலாம் என்று சிரேஷ்ட அமைச்சார் ஒருவர் தெரிவித்துள்ளார்

அரசு புலிகள் பேச்சுவாத்தைக்கான சூழ்நிலை வெகுதொலைவில்உளளதாக மற்றொரு சிரேஷ்டஅமைச்சரும் தெரிவித்துள்ளார், (வ)

### யுத்தத்தை

கின்றேன்.

விடுதலைப் புலிகள் மீது அரசுவிதித்த தடையே உடனடியாக நீக்கினால் சர்வதேசரீதியாக அவர்கள் மீதுவிதிக்கப்பட்ட தடை நீங்கிவிடும். இந்நிலைஏற்படுமானால்சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகள் அமைப்பு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகமாறிவிடும்.

இதனாலேயே புலிகள் மீதான தடையை நீக்குவது பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

யுத்தத்தில் ஈடுபட்ட அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்கு முன்வரும் வேளையில். அவர்களுக்கிடையே புரிந்துணர்வு ஏற்படுவ காலமெடுப்பது இயல்பானது ஆனால் சமாதான முயற்சிகள் நடைபெறும்போது முரண்பாடுகள்ஏற்பட்டலும் அது பேச்சுக்களை கைவிடும் நிலையாக மாறக்கூடாது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து விடுதலைப்புலிகளின் நிபந்தனை முட்டுக்கட்டையாகவுள்ளது.இந்நிபந்தனைகள் தொடர்பாக பாதுகாப்புக்குழு முடிவுகளை எடுக்கும்.

விடுதலைப்புலிகள் அமைப்பின்மீது விதித்ததடையை அரசுஉடன்நீக்கினால் ஆயுதம்தாங்கிய போராளிக் குழுவாகிய விடுதலைப் புலிகளை அரசாங்கம் அங்கீகரித்த போராட்ட அமைப்பாக ஏற்றுக் கொண்டதாகஅமையும்.

இதனாலேயே இவ்விடயம் பற்றி அரசாங்கம்ஆராய்ந்து வருவதனால் திடீரென எந்தமுடிவுகளையும் வெளிப்படுத்த முடியாதுள்ளதாக அமைச்சர் நந்தமித்திர எக்கநாயக்கா மேலும்தெரிவித்துள்ளார். (இ)

# வடமராட்சியிலிருந்து 69பேர் திருமலை பயணம்

[யாழ்ப்பாணம்]

திருமலை மாவட்டசாரணர் ஜம்போறியத்திலிருந்து கலந்துகொள்ள வடமராட்சிப் பாடசாலையிலிருந்து 69பேர் திருமலைசெல்கின்றனர்.

எதிர்வரும் 29ம் திகதிசெல்லவுள்ளசாரணர் குழுவிற்கு திருமலை சென்று திரும்புவதற்கான கப்பற்பயணஏற்பாடுகளை இலவசமாகபருத்தித்துறைப் பிரதேசசபைத்தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அவர்களுடன் பேச்சு நடாத்தி ஏற்பாடு செய்துள்ளார்.

ஆசிரியர்களுடன்கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரியிலிருந்து 14 பேரும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து 21 பேரும். நெல்லியடி மத்திய கல்லூரியிலிருந்து 12 பேரும் மற்றும் தொண்டமனாறுவீரகத்திப் பிள்ளைமகாவித்தியாலயத்திலிருந்து 12 பேருமாக மொத்தமாக 69 பேர் சாரணர் ஜம்போறியத்தில் கலந்து கொள்கின்றனர். (அ)


நாகம்ஸ்
(சுன்னாகம்)
எம். ஜி. ஆர், சரோஜாதேவி நம்பியார் நடித்த
எங்கவீட்டுப் பிள்ளை
11-00, 2-30 பு. நே.
இன்னும் ஒரிரு தினங்களுக்கு மட்டும்.
(ரீகல்) (கி-2021)


# சேக்கிழார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் எடுக்கும் சேக்கிழார் குருபூசை கச்சேரி நல்லூர் வீதி ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் நாளைகாலை 8-00 மணிக்குபண்டிதர்வ பேரின்ப நாயகம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ)

# நல்லைக்குமரன் 9-வது மலர் உற்சவகாலத்தில் வெளியிடப்படும்

## பதிப்பாசிரியர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவசமய விவகாரக் குழுவினால் ஒன்பதாவது நல்லைக்குமரன் மலரின் வெளியீட்டு வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருவதாக அதன் பதிப்பாசிரியர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் யாழ். மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்ட சைவசமய விவகாரக்குழு தற்போது விஸ்தீரணப் படுத்தப்பட்டு அகில இலங்கை ரீதியில் பரவலாக்கப் பட்டிருந்தது தெரிந்ததே.

கடந்த எட்டு வருடங்களாக வெளியிடப்பட்டு வந்த நல்லைக்குமரன் மலரின் 9வது வெளியீடு நல்லூர் கந்தனின் மகோற்சவ காலத்தில் வெளியிடப்படுமெனவும் 'நல்லைக்குமரன் மலர்' என்ற பெயரில் அகில இலங்கை சைவசமய விவகாரக்குழு தவிர்ந்த வேறு எந்த அமைப்பும் சட்டரீதியாக வெளியிடவோ அல்லது அம்மலரின் பெயரைப் பயன்படுத்தவோ முடியாதென்றும் பதிப்பாசியர்ரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வழமைபோல் சமயப்பெரியார்கள். அறிஞர் பெருமக்களிடமிருந்து ஆக்கங்கள் வேண்டப்படுவதாகவும் இது தொடர்பான விளம்பரம் மிகவிரைவில் பத்திரிகைளில் பிரசுரிக்கப்படும் எனவும்தெரிவிக்கப்படுகிறது. (ந)


எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில்.....



நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்.
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம். [கி-2003]
நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் [illegible] விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.